
பக்கங்கள் 25 + 06

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## சம்பந்தன் எதிர்பார்த்த தீர்வுக்கு உழைப்போம்!

**அண்ணாமலை உறுதி**



பிரிக்கப்படாத – பிளவுபடாத – ஒன்றுபட்ட – இலங்கைக்குள் இலங்கைத் தமிழர்களுக்கு கௌரவமான, நீதியான

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 23 ஞாயிற்றுக்கிழமை 07.07.2024 அதிர்வு 342



# சம்பந்தனுக்கு கண்ணீரோடு விடை கொடுத்தது தமிழினம்

## தமிழர் தேசத்தின் தலைநகரில் உணர்வுபூர்வமாக இறுதி நிகழ்வு

(எஸ்.கீதபொன்கலன்)

தமிழர் தேசத்தின் தலைமகனாக தமிழ் மக்களை வழிநடத்திய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனுக்கு தமிழினம் இன்று தமிழர் தேசத்தின் தலைநகர் திருகோணமலையில் நடந்த அவரின் இறுதி நிகழ்வில் கண்ணீரோடு விடைகொடுத்தது.

கடந்த ஞாயிறன்று காலமான சம்பந்தனின் இறுதி சமயக்கிரியைகள், இலக்கம் 115, அஞ்சல் நிலைய வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 1.00 மணியளவில் நிறைவு பெற்றன.

2 மணிக்கு விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் அஞ்சலி உரைகள் ஆரம்பமாகின.

04

# பொலிஸ் அதிகாரப் பகிர்வை மட்டும் ஒருபுறம் வைத்து விட்டுப் பேசுவோம்!

## சம்பந்தனின் பூதவுடல் முன் ரணில் பேச்சு

(எஸ்.கீதபொன்கலன்)

“13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகார விடயத்தை ஒரு புறம் வைத்துவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சாத்தியமான தீர்வு ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேசுவோம்.”

இன்று திருகோணமலையில் இரா. சம்பந்தனின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு:–

நான் ஜனாதிபதியாக பதவியேற்ற காலத்திலேயே ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான தீர்வை தமிழர்களுக்கு பெற்றுக் கொடுப்பது குறித்து சம்பந்த

04



# சம்பந்தனின் இறுதி நிகழ்வில்....
















# சம்பந்தனின் இறுதி நிகழ்வில்....



















# சிறுவர்கள் ஓரமாகப் போய் விளையாட வேண்டும் ஜீவனின் ஆர்ப்பாட்டம் குறித்து மனோ நையாண்டி



தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மணோகனேஷன் எம்.பிக்கு எதிராக மலையகத்தில் ஐந்து இடங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை போராட்டங்கள் நடத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் களம் இறங்கியுள்ள நிலையில் –

“எனக்கு எதிராக சில மலையக நகரங்களில், இ.தொ.காவின் சிறுவர் பிரிவினர் ஆர்ப்பாட்டம் செய்வதில் எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், சிறுவர்கள், போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல், ஓரமாக போய் விளையாட வேண்டும்” மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இது பற்றி மனோ எம்.பி மேலும் தெரிவிக்கையில் –

பட்டாசு கொழுத்தி, மண் சோறு பொங்கி, குழந்தைகள் ஆர்ப்பாட்ட விளையாட்டு விளையாடட்டும். ஆனால், வீதி போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடைஞ்சல் இல்லாமல் ஓரமாப் போய், விளையாட வேண்டும் என இந்த சிறுவர்களுக்கு அறிவுரை கூறுகின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று மாவட்டங்களில் ஐந்து பிரதான நகரங்களில் இன்று இந்த எதிர்ப்பு போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நுவரெலியா மாவட்டத்தில் கொட்டக்கலை நகரில் வினாயகர் ஆலயத்திற்கு முன்பாகவும் பொகவந்தலாவை நகரிலும், சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி காவத்தை நகரத்திலும், கேகாலை தெஹியோவிட்ட நகரத்திலும், ஊவா மாகாணத்தில் பதுளை நகரத்திலும், இந்த எதிர்ப்புப் போராட்டம் இன்று இடம் பெற ஏற்பாடாகியிருந்தது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்







### சம்பந்தனுக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சித் தலைவரின் பிரதிநிதி லக்ஸ்மன் கிரியெல்ல, பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் ப.அண்ணாமலை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, ரவூப் ஹக்கீம் எம்.பி., மனோ கணேசன் எம்.பி., சித்தார்த்தன் எம்.பி., அருண் தம்பிமுத்து, ஜே.வி.பியின் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் உரையாற்றினர்.

இன்றைய இறுதி நிகழ்வுகளில் இலங்கைக்கான அயல் நாட்டுத் தூதுவர்கள், சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மாலை 3.30 மணிக்கு அஞ்சலி உரைகள் நிறைவு செய்யப்பட்டு, தொடர்ந்து இறுதி ஊர்வலம் புறப்பட்டது.

அஞ்சல் நிலைய வீதி, மின்சார நிலைய வீதி ஊடாக கிறீன் வீதிச் சந்தியை அடைந்து, அங்கிருந்து கல்லூரி வீதிக்கு சென்று, மீண்டும் சோனகர் தெரு ஊடாக இராஜவரோதயம் வீதியை அடைந்து, பின்னர் பிரதான வீதிக்குச் சென்று, அங்கிருந்து கடற்காட்சி வீதி ஊடாக ஏகாம்பரம் வீதிக்கு சென்று இறுதியாக திருகோணமலை இந்து மயானத்தை அடையவிருந்தது.

அங்கு அன்னாரின் மூத்த மகன் ச.சஞ்ஜீவன் சிதைக்கு தீமூட்ட உள்ளார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் செல்லும் வழியில் உள்ள ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மற்றும் பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயம் என்பனவற்றில் பூதவுடலுக்கு விசேட அஞ்சலியை செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதே வேளை இறுதி ஊர்வலம் செல்லவுள்ள வீதிகளில் உள்ள மக்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### சம்பந்தன்...

தீர்வு ஒன்று வேண்டும் என்பதே தனது உறுதியான நிலைப்பாடு என மறைந்த தலைவர் சம்பந்தன் வலியுறுத்தி வந்தார். அதனைப் பெற்றுத் தருவதற்கு எங்களாலான அனைத்து முயற்சிகளையும் எடுப்போம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறி வைக்க விரும்புகிறேன்.

–இவ்வாறு இன்று திருகோணமலையில் இரா.சம்பந்தரின் இறுதி நிகழ்வில் அஞ்சலி உரை நிகழ்த்துகையில் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

### பொலிஸ்...

னோடும் ஏனைய தமிழ் தலைவர்களோடும் பேசி வந்திருக்கிறேன். அதற்கான முன் முயற்சிகளை ஆரம்பித்தோம்.

ஆனால் நாடு வங்குறோத்து நிலையில் இருந்ததால் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய ஒரு கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. அதனால் தீர்வு முயற்சிகள் தாமதமாகின. இப்போது நாங்கள் மீண்டும் அதனை ஆரம்பிக்க வேண்டும்.

13 ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரத்தை ஒரு புறம் வைத்து விட்டு நாங்கள் தீர்வைப் பற்றி விரிவாக பேசலாம்.

காணி ஆணை குழுக்களை நியமிப்பதற்கான சட்டமூலம் தயாராக இருக்கின்றது.

மாகாண சபை தேர்தல் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். ஆனாலும் புதிய முறையிலான தேர்தல் சிக்கல் நிறைந்தது என்று கருதப்படுவதால் பழைய முறையில் தேர்தலை நடத்தலாம் என யோசிக்கிறோம். ஆயினும் இளைஞர், யுவதிகளுக்கான பிரதிநிதித் துவம் அதிகரிக்கப்பட வேண்டும். அதே சமயம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்பதவியை இழக்காமல் மாகாண சபைகளில் போட்டியிடுவதற்கான மாற்றங்களையும் நாம் கொண்டு வர யோசிக்கிறோம்.

சம்பந்தன் தமிழர்களின் ஒரு சிறந்த தலைவர். அது மாத்திரமல்ல,அவர் இலங்கை மக்களின் தலைவரும் கூட. சிறந்த எதிர்க்கட்சித் தலைவராக செயல்பட்டார். 2018 முறையற்ற விதத்தில் என்னுடைய பிரதமர் பதவி சவாலுக்கு உட்படுத்தப்பட்ட போது சிறந்த எதிர்க்கட்சித் தலைவராக அவர் காரியமாற்றினார்.முதலில் ஜனாதிபதித் தேர்தல். பின்னர் மாகாண சபைத் தேர்தல்,நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். – என்றார்



# ரணிலுக்கு பெரமுனவின் ஆதரவு தொடரும் என பஸில் அறிவிப்பு!

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

**நாட்டைப் பற்றி நன்கு சிந்தித்து இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் அரசியல் வாழ்வில் 27 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு களுத்துறையில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட பஸில் ராஜபக்ஷ –

“கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு எமது கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து எமக்குஒ கிடைத்த பலத்துடன் இந்த அரசாங்கத்தில் ஒரு கட்சியாக செயற்படும் போது எப்பொழுதும் அச்சமின்றி உங்களுக்கு உதவியுள்ளோம்.

அன்றைய தினம் ரோஹித அபேகுணவர்தன உட்பட எமது கட்சியில் உள்ள அனைவரும் இந்த நாட்டைக் காப்பாற்றும் திறன் உங்களிடமே இருக்கின்றது என்று தீர்மானித்தோம்.

இன்று வரை அந்த ஆதரவை நாங்கள் உண்மையாக வழங்கி வருகின்றோம். அந்த ஆதரவு தொடரும். இது நாட்டுக்காக எடுத்த முடிவு.

இந்த நாட்டு மக்களை நீங்கள் பாதுகாக்கும் வரை உங்களுக்கு எல்லா பலத்தையும் தருவோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். – என்றார்.

# உயிரிழந்த கடற்படை அலுவலர் குடும்பத்துக்கு நிதி வழங்க அரசுடமையாக்கப்பட்ட இந்திய மீனவர் படகுகள் ஏலத்துக்கு

**(ந.லோகதயாளன்)**

இலங்கையில் அரச உடமையாக்கப்பட்ட இந்தியப் படகுகளை ஏலம் விட்டு அப் பணத்தை உயிரிழந்த கடற்படையைச் சேர்ந்தவரின் குடும்பத்திறகு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றங்களினால் அரச உடமையாக்கப்பட்ட இந்தியப் படகுகளே இவ்வாறு ஏலம் விடப்பட்டு பணம் உயிரிழந்த கடற்படையைச் சேர்ந்தவரின் குடும்பத்திற்கு வழங்கப்படவுள்ளது.

இதற்காக தற்போது இலங்கையில் அரச உடமையாக்கப்பட்ட இந்தியப் படகுகள் எந்த மாவட்டத்தில், எத்தனை படகுகள் உள்ளன என்ற விவரம் பெறப்பட்டு ஏலத்திற்கான பணிகளை முன்னெடுக்குமாறு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்களிற்கு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வாய்மொழியாக உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவிற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 41 படகுகளும், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங் களில் தலா 5 படகுகளும், திருகோ ணமலை மாவட்டத்திலும் இரு படகுகளும் உள்ளன எனக் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

இதேநேரம் 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் பிடிக்கப்பட்ட இந்தியப் படகுகள் அனைத்தும் 22 ஆம் ஆண்டு ஏலத்தில் விற்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## டிஜிட்டல் கல்வியின் விருத்தி

நவீனத்துவத்தை நோக்கி உலகம் பாய்ந்து கொண்டிருக்கின்றது. அதற்குச் சமதையாக - ஈடு கொடுத்து - நமது நாடும் நவீனத்துக்குள் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதானால், அதற்காக நாடு தன்னை முழுமையாக மாற்றியமைத்துத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

நவீனத்தோடு அபிவிருத்தி என்ற திசையில் நகர்வதானால் நவீனத்துவத்தின் போதனை சிறார் கல்வியிலிருந்து ஆரம்பிப்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

அந்த நோக்கோடு சில திட்டங்களை அறிவித்திருக்கின்றார் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த.

“எதிர்காலத்தில் பாடசாலைகள் டிஜிட்டல் மயமாக்கலில் உள்வாங்கப்படும். அதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட 1,250 பாடசாலைகள் தற்போது வலையமைப்பின் ஊடாக இணைக்கப்பட்டுள்ளன. அடுத்த மூன்று ஆண்டுகளில் 10,026 பாடசாலைகளை டிஜிட்டல் மயமாக்க எதிர்பார்க்கிறோம்.”

- இவ்வாறு நேற்று காலி ஹால் டி கோல் ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது கல்வி அமைச்சர் குறிப்பிட்டிருக்கின்றார்.

“இன்று தென் மாகாணத்திலுள்ள இருநூறு பாடசாலைகளில் நவீன வகுப்பறைகள் உள்ளன. 2,000 டப் கணினிகள் சொந்தமாக உள்ளன. இதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.”

- என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

அவரது கருதுப்படி, அடுத்த மூன்று ஆண்டுகளில் 10,026 பாடசாலைகளை டிஜிட்டல் மயமாக்க எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது நாட்டில் 98 சத வீதமான பாடசாலைகள் டிஜிட்டல் மயமாகின்றன.

நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ள - ஈடு கொடுத்து நமது நாடும் நிமிர்ந்து நிற்க - இது தவிர்க்க முடியாத கட்டாயம்.

பாடசாலைகளில் டிஜிட்டல் கல்வியை நிலைநிறுத்தி மேம்படுத்துவதாயின் பாடசாலைகளுக்கு மட்டும் அந்த வசதியை ஏற்படுத்தினால் போதுமானது அல்ல.

பாடசாலைக் கட்டமைப்புக்கு அப்பால், கல்வி அமைச்சு, மாகாண, வலய, கோட்டக் கல்வி அலுவலகங்கள் உட்பட கல்விசார் நிர்வாகத்துடன் தொடர்புடைய அமைப்புகள், தேசிய கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், ஆசிரியர் நிலையங்கள், பிரதேச ஆங்கில மொழிக் கற்றல் நிலையங்கள், தகவல் தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்வி நிலையங்கள் உட்பட பல நிறுவனங்கள் சமாந்தரமாக டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெறுவது அவசியமானது.

அப்போதுதான் நமது இளம் சமூகத்திற்கு தரமான - ஒழுங்கான - எதிர்கால சவால்களை எதிர்கொள்ள கூடிய - டிஜிட்டல் கல்வியை ஊட்ட முடியும்.

டிஜிட்டல் கல்வியுடன் தொடர்புடைய கட்டமைப்பு வசதிகளை பாடசாலைகளில் இருந்து மேற்படி அமைப்புகள் வரை விரிவுபடுத்துவது என்பது அதிக செலவு பிடிக்கும் விடயமாகும்.

நிதியை வீணாக்காமல், சரியான - முறையான - ஆலோசனைகள், கண்காணிப்புகள், நெறிப்படுத்தல்களுடன் அவற்றை பயன்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தத் திட்டம் சரிவரப் பயன்படுத்தப்படும் போது ஏற்கனவே பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில்நுட்பத் துறை பட்டம் பெற்றவர்களின் பங்களிப்பை உச்ச அளவில் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிட்டும். அத்துறையில் பட்டம் பெற்றவர்களுக்கும் தொழிற்சந்தையில் நூறு வீத தொழில் வாய்ப்புகளை வழங்கும் சூழ்நிலையை இது ஏற்படுத்தித் தரும்.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் உலகை வெல்லும் வாய்ப்பை நாம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றார் கல்வி அமைச்சர்.

பொருத்த தருணத்தில், தவிர்க்க முடியாத நிலைமாறு காலம் இது. இதை எப்படியாவது செய்துதானாக வேண்டும்.





# மாணிக்கங்கையில் முதலை கடித்து ஒருவர் பலி! பெரஹராவில் இரண்டு யானைகள் திடீர் குழப்பம்!!

**(கதிர்காமத்திலிருந்து வி.ரி. சகாதேவராஜா)**

கதிர்காமம் மாணிக்கங்கையில் நீராடிய ஒருவர் முதலை கடித்து ஸ்தலத்திலேயே பலியாகினர் .

இச்சம்பவம் கொடியேற்ற தினமான நேற்று சனிக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

நேற்று மாலை 5.30 மணியளவில் கொடியேற்றம் இடம்பெற்று முதலாவது பெரஹரா பெரிய ஊர்வலத்திற்காக மக்கள் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் பலர் மாணிக்க கங்கையில் நீராடிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அங்கிருந்த முதலை நீராடிய ஒருவரை கடித்துக் குதறி இருக்கின்றது .

சற்று வேளையில் அங்கு வந்த பொலிஸாரின் மீட்பு அணியினர் உடன் பாய்ந்து அங்கே கம்பியால் குத்தி அதற்குரிய நடவடிக்கை எடுத்த பொழுது இவர் மேலே மிதக்க காணப்பட்டார். பின்பு அவரது சடலம் கதிர்காமம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவர் மட்டக்களப்பைச்சேர்ந்த நடுத்தர வயதுடையவர் என ஆரம்பத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பின்னால் அவரது மனைவி, உறவினர்கள் அங்கு அழுதழுது சென்றார்கள் .

இதேவேளை, நேற்று முதலாவது பெரஹராவில் கலந்து கொண்ட இரண்டு யானைகள் குழப்பம் விளைவித்தன. முதல் நாளில் லட்சம் மக்கள் பெரஹரா பார்க்க வந்திருந்தனர். யானைகள் மதங் கொண்டு ஓடிக் குழப்பம் விளைவித்தன.

இதனால் மக்கள் பீதியோடு கலைந்து ஓடினர். பிள்ளைகள் ஓலமிட்டனர். பலர் முண்டியடித்துக் கொண்டு வெளியேறினர்.

அதன்போது சிலருக்கு காயமும் ஏற்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் கதிர்காமம் செல்லும் அடியார்களின் மனதிலே ஒருவித அச்சத்தை உண்டு பண்ணும்.

லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடும் இப் புனித பூமியில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற அனுமதிக்ககூடாதென்று பலரும் கருத்து தெரிவித்தனர்.

எனவே கதிர்காம நிர்வாகம் இதற்குதக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்கின்றனர் .

அந்த புனித பூமியிலே மக்களுக்கான பாதுகாப்பையும் அவர்கள் வழங்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுக் கொண்டார்கள்.





# போலி வெளிநாட்டு கடவுச்சீட்டில் கனடா செல்ல முயன்ற யாழ்வாசி!

போலி வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கனடாவுக்குச் சென்ற நபரை குடிவரவுத் திணைக்களத்தின் எல்லை அமுலாக்கப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று இரவு இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர்.

இவர் நேற்று இரவு 07.20 மணியளவில் சவூதி அரேபியாவின் தமாம் நோக்கிப் புறப்படவிருந்த ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் அவரைத் தடுத்து நிறுத்தி கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களைச் சரிபார்த்தனர்.

இவருடைய கடவுச்சீட்டு, கனடாவில் விசா பெற்றுள்ள மற்றுமொரு இலங்கையருக்குச் சொந்தமான கடவுச்சீட்டு என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

18 லட்சம் ரூபாவைத் தரகர் ஒருவரிடம் கொடுத்து, கடவுச்சீட்டில் தனது படம் மற்றும் பிற அடிப்படைத் தகவல்களை இணைத்து இந்தக் கடவுச்சீட்டை போலியாகத் தயாரித்தமை தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரின் பயணப் பையை சோதனை செய்த போது அதில் அவரது உண்மையான கடவுச்சீட்டு, போலி விமான டிக்கெட், போலி துபாய் குடியுரிமை விசா மற்றும் போலி குடியேற்ற முத்திரை ஆகியவையும் கண்டு பிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# வாகரை கிருமிச்சை குளத்தில் மீன்பிடிக்க சென்ற மீனவர் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்பு!

**(கனகராசா சரவணன் )**

வாகரை கிருமிச்சை குளத்தில் மீன் பிடிக்க சென்ற மீனவர் ஒருவர் காணா மல் போனவரை கடற்படையினரின் உதவியுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்டகப்பட்டுள்ளார் என வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிருமிச்சை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய 2 பிள்ளைகளின் தந் தையான யசோதரன் புண்ணியராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

இவர் வழமைபோல நேற்று சனிக் கிழமை அதிகாலையில் வீட்டில் இருந்து கிருமிச்சை குளத்தில் மீன்பிடிப்பதற்காக



சென்று பகலாகியும் வீடு திரும்பாத மையையடுத்து அவரை உறவினர்கள் தேடிச் சென்ற போது அவர் காணாமல் போயுள்ளமையுடன் குளத்தின் கரை யில் அவருடைய தோணி இருப்பதையும் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து இயந்திர படகு மூலம் கடற்படையினர் குளத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை தேடுதலின் போது நீரில் மூழ்கிய நிலையில் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச் சேனை வைத்தியசாலையில் ஒப்படைத் தனர்

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை வாகரைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# போதை தரும் என மூலிகைச் செடியின் பழ விதைகளை உட்கொண்ட 7 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பு

## வெலிகந்த பிரதேசத்தில் சம்பவம்

**(கனகராசா சரவணன்)**

பொலன்னறுவை வெலிகந்த பிர தேசத்தில் பாடசாலை ஒன்றில் நம்புட் டான் போன்ற அத்தன என்ற மூலிகைச் செடியின் பழ விதைகளை உட்கொண்ட 7 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற் றுள்ளதாக வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகந்த அசேலபுரத்தில் சித்த வைத்தியங்களுக்குப் பயன்படுத்தப்படும் மூலிகைச் செடியான அத்தன செடியின் பழத்தின் விதைகளை உட்கொண்டால் போதை ஏற்படும் என முதியவர் ஒருவர் உட்கொண்டு வந்துள்ளதை அவதா னித்த பாடசாலை சிறுவன் ஒருவன் அந்த விதைகளை உட்கொண்டபோது அவனுக்கும் போதை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பாடசாலைச் சிறுவன் தான் கல்விகற்கும் அசேலபுரத்



திலுள்ள பாடசாலையிலுள்ள சக மாணவர்களுக்கு தெரியப்படுத்தியமை யடுத்து அவர்கள் இந்த விதையை எடுத்துக் கொண்டுவருமாறு அந்த மாணவனிடம் தெரிவித்திருக்கின்றனர்.

இதனையடுத்து வெள்ளிக்கிழமை அந்த விதையை பாடசாலைக்கு எடுத் துச் சென்ற மாணவன் சக மாணவர்க ளுக்கு வழங்கியதையடுத்து அவர்கள் அதனை உட்கொண்டிருக்கின்றனர். 4 மாணவர்கள், 3 மாணவிகள் ஏழு பேர் மயக்கமடைந்தமையையடுத்து அவர்களை உடனடியாக அம்புலனஸ் வரவழைத்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அங்கு சேர்க்கப்பட்ட னர் எனப் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் 6 மாணவர்கள் சிகிச்சை பெற்று வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர். ஒரு மாணவி தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றார். எனினும் எந்த விதமான ஆபத்துக்களும் இல்லை என வைத்தியசாலை பணிப் பாளர் தெரிவித்தார்.

இதேவேளை இது தொடர்பான மேல திக விசாரணைகளை வெலிகந்த பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு சீனாவின் 500 பொருத்து வீடுகள் வந்து சேர்ந்தன!

(ந.லோகதயாளன்)

வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கான சீனாவின் பொருத்து வீடுகள் இன்று மாவட்டங்களிற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

சீன அரசினால் வடக்கு கிழக்கு மீனவர்களிற்காக வழங்கப்பட்ட 500 பொருத்து வீடுகள் அடங்கிய பெட்டிகள் கொண்டேயினர்கள் மூலம் இன்று எடுத்து வரப்பட்டுள்ளன.

இதில் யாழ்ப்பணத்திற்கு 116 வீடுகளும் ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை, கல்முனை ஆகிய ஆறு இடங்களிற்கும் தலா 64 வீடுகள் என்ற அடிப்படையில் இந்த 500 வீடுகளும் கடற்றொழில் அமைச்சினால் பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு எடுத்து வரப்பட்ட வீடுகள் அனைத்தும் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களின் பொறுப்பில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.



# கல்முனை பிரதேசத்தில் புகழ்பூத்த கவிஞர் மு.சடாட்சரன் காலமானார்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனையை பிறப்பிடமாகவும் பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட நவீன இலக்கிய வளர்ச்சியில் கிழக்கிலங்கையின் புகழ் பூத்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கிய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், கவிஞர், கலாபூஷணம் மு.சடாட்சரன் நேற்று தனது 84 ஆவது வயதில் காலமானார்.

ஈழத்து கலை இலக்கிய பரப்பில் தனக்கென தனி முத்திரை பதித்தவர் மூத்த கவிஞர் மு.சடாட்சரன்.

அனைவரது பாராட்டையும் பெற்றவர். கிழக்கின் கவிச்சக்கரவர்த்தியாக திகழ்ந்த மறைந்த கவிஞர் நீலாவணனின் பேரன்புக்கு பாத்திரமானவர்.



தனது வாழ்நாளில் பெரும் பகுதியை எழுத்து மற்றும் கலை இலக்கிய துறைக்காக அர்ப்பணித்தவர். இன்னும் இரு நூல்களை வெளியிட வேண்டும் என முனைப்புடன் செயற்பட்டுவந்தவர். அன்னாரின் இழப்பு ஈழத்து கலை இலக்கிய பரப்பில் பெரும் வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளது.

முஸ்லிம் மாணவர்களுக்கும் தனது கல்வி சென்றடைய வேண்டும் என்பதற்காக கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்கு ஆசிரியராக பணியாற்றியமை மறக்க முடியாத அனுபவமாகவுள்ளது.

# பொத்துவிலில் சம்பந்தனுக்கு அஞ்சலி! நிகழ்வில் உலருணவும் விநியோகம்!!

## முன்னாள் உபதவிசாளர் பார்த்தீபன் ஏற்பாடு






**(வி.ரி.சகாதேவராஜா)**

மறைந்த தமிழ்த் தலைவர் இரா. சம்பந்தனுக்கு பொத்துவிலில் இரங்கல் அஞ்சலி நிகழ்வும் உலருணவு விநியோகமும் நேற்று இடம்பெற்றன.

பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் பெருமாள் பார்த்திபன் தலைமையில் இது நடைபெற்றது.

முன்னதாக தமிழ் தேசியத்தின் கொள்கைக்காய் குரல் கொடுத்தவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் சுமார் 75 பின்தங்கிய குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி மற்றும் உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

தனது சொந்த நிதியை இப்பணிக்காக முன்னாள் தவிசாளர் பெருமாள் பார்த்தீபன் பயன்படுத்தியுள்ளார்.

இந்த நிகழ்வில் குண்டுமடு ஆலையடிப் பிள்ளையார் ஆலயத் தலைவர் எஸ்.கந்தசாமி உள்ளிட்ட பலர் இரங்கலுரை நிகழ்த்தினர்.

பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வில் சம்பந்தன் ஐயாவின் திருவுருவப் படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தி மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய நூலகம் பணிப்பாளரால் திறந்து வைப்பு




**(மாளிகைக்காடு)**

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள்அமைச்சின்கீழுள்ளசாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளநூலகம் நேற்று (06) சனிக்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள கலாச்சார மேம்பாட்டு பணிப்பாளர் கலாநிதி பிரசாத் ரணசிங்கவால் இது திறந்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது கலாச்சார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு பிரதம அதிதியுடன் இணைந்து இந்த நூலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் அஸ்வான் மௌலானா, உப செயலாளர் நூருல் ஹுதா உமர், பொருளாளர் ஏ.பி.எம். நௌஸாத் உட்பட நிறைவேற்று சபையினரும், பிரதேச மூத்த இலக்கியவாதிகள், கல்விமான்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது வாசிகசாலைக்கான அங்கத்துவம் தொடங்கி வைக்கப்பட்டதுடன், பிரதேச எழுத்தாளர்கள் தமது நூல்களை இங்கு அன்பளிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# தோட்ட வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தரை சந்தித்துக் கலந்துரையாடினார் ஜீவன் தொண்டமான்











தோட்ட வைத்திய அதிகாரிகள், தோட்ட குடும்ப நல உத்தியோகத்தர்கள், மற்றும் சிறுவர் பாராமரிப்பு நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (06) இடம்பெற்றது.

கொட்டகலை ஊடுகு வளாக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய 600 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வருகை தந்த உத்தியோகத்தர்கள், தாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இதன்போது அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளும் செயற்பாடு போன்று உங்களுடைய சம்பள அதிககரிப்புக்கும் நான் உறுதுணையாக இருப்பேன்.

தற்போது தோட்டங்களில் உத்தியோகத்தர்களாகக் கடைமை புரிந்து கொண்டிருக்கும் உங்களுக்கும் அமைச்சினூடாக வீடமைப்பு திட்டத்தையும், காணியையும் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். தோட்டத் தொழிலாளர்களுக்கு செய்ததைப் போன்றே உங்களுக்கும் காப்புறுதி திட்டத்தையும் விரைவில் நடைமுறைப்படுத்த உள்ளோம்.

சுமார் 1500 சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் உள்ள 26000 சிறுவர்களுக்கும் ஊட்டச் சத்துள்ள காலை உணவு வழங்குவதற்காக புதிய வேலைத் திட்டமும் விரைவில் நடைமுறைக்கு வரும்.

தோட்டப்புற மாணவர்கள் கல்வி கற்ற பின்னர் அரச வேலைகளை தவிர்த்து தனியார் துறை மற்றும் சுய தொழில்களிலும் ஈடுபட ஆயத்தமாக இருகக வேண்டும். இதற்க ஏற்றவகையில் பிள்ளைகளைத் தயார்படுத்த வேண்டும் என்றார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் கலந்து கொண்ட 3000 கற்பிணி தாய்மார்களுக்கான சுகாதார பொருள்களையும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் வழங்கி வைத்தார்.

இந்த சந்திப்பின் போது நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், இ.தொ.கா தேசிய அமைப்பாளர் சக்திவேல், பிரதி தலைவர் கணபதி கணகராஜ், அமைச்சரின் ஒருங்கினைப்பு செயலாளர் அர்ஜுன், ஹட்டன் பிராந்திய மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் ரனசிங்க மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.





# கல்முனை அல் மிஸ்பாஹ்வில் பண்டிகைக்கால கலாச்சார நிகழ்வு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய தரம் 02 மாணவர்கள‌ால் ஒழுங்குபடுத்தப்பட்ட புத்தாண்டு பண்டிகைக்கால கலாச்சார நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை தரம் 2 ஆசிரியர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி நிகழ்வு பாடசாலை அதிபர் அப்துல் றஸாக் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.



# கல்முனையில் இடைவிலகிய மாணவர்களை பாடசாலையில் இணைக்கும் திட்டம் வெற்றி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனையில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் வேலைத் திட்டம் வெற்றியளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பாடசாலையின் கட்டாயக் கல்விக் குழு, வலயக்கல்வி அலுவலகம், அம்பாறை மாவட்டச் செயலகம், கல்முனை பிரதேச செயலகம், கல்முனை தெற்குப் பொதுச் சுகாதாரப் பணிமனை மற்றும் கல்முனைப் பொலிஸ், கிராம சேவகர்கள் இணைந்து பாடசாலையில் இடைவிலகிய மாணவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களை மீண்டும் பாடசாலைக்கு இணைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டமானது பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். நிசாத் நெறிப்படுத்தலின் நடைபெற்றது.



இதன் அடிப்படையில் பாடசாலையில் இருந்து இடை விலகிய மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் சந்தித்து, உரையாடி அவர்களுடைய பிரச்சினைகளை அறிந்து மீண்டும் பாடசாலையில் இணைந்து கொள்வதற்கான ஆலோசனை வழிகாட்டல்களையும் மேற்கொண்டனர்.

குடும்ப வறுமை காரணமாகவே அதிகமான மாணவர்கள் பாடசாலை கல்வியிலும் இடை விலகியுள்ளமை இதன்போது தெரியவந்துள்ளது.

# கல்முனை தெற்கு சுகாதாரப் பணிமனையின் பற்சிகிச்சை முகாம் இஸ்லாமாபாத் வித்தியில்






**(நூருல் ஹுதா உமர்)**

கல்முனை வலய இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களின் பற் சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட பல் சிகிச்சை முகாம் இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத்தின் நெறிப்படுத்தலின் கீழ் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஆர். எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த முகாமில், பற் சுகாதார நிபுணர் டாக்டர் திருமதி. எம். ஆர்.எஃப். சுர்பா, பற் சுகாதார அதிகாரி டாக்டர் திருமதி பரிஹா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பற் சுகாதார சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எம் பாரூக். பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எம். ஜுனைட் ஆகியோர் இணைந்து மாணவர்களின் பற் சுகாதாரம் தொடர்பான பரிசோதனைகளிலும், விழிப்புணர்வுச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.





# திருப்பழுகாமம் கண்ணகையம்மன் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று!

(பழுவூரான்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்ணகையம்மன் ஆலயங்களுள் ஒன்றான திருப்பழுகாமம் கண்ணகையம்மன் ஆலய மகா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை (07) காலை 05.56 மணி தொடக்கம் 06.48 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் பரிபாலன தெய்வங்களான கண்ணகையம்மன் மற்றும் வைரவர் தெய்வங்களுக்கும் பக்த அடியார்கள் புடை சூழ, வேதபாராயணங்கள் முழங்க நிகழ்த்தப்பட்டது.

இந்தக் குடமுழுக்குப் பெருவிழாவை பிரதிஷ்டா பிரதமகுரு சிவஶ்ரீ சு.கு.விநாயகமூர்த்திக் குருக்கள் தலைமையில் ஆலய நம்பியார் சிவஶ்ரீ க. சுந்தரம், சிவஸ்ரீ ந.கு.பத்மநிலோஜஈசான சிவம், வி.கு.சிஷ்யமேனன்சர்மா ஆகியோர் நிகழ்த்தி வைத்தனர்.

இந்தப் பெருவிழாவைக் காண மட்டக்களப்பு மாவட்டத்தின் நாலாபக்கமும் இருந்து பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் வருகை தந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை பாற்குடப்பவனியும் சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளன என்று இந்து கலா மன்றத் தலைவர் வ.பரமலிங்கம் தெரிவித்தார்.















# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் காரைதீவில் நிதியுதவி!

**(மாளிகைக்காடு)**

சீரற்ற காலநிலையால் இந்த வருட ஆரம்பப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக அம்பாறை மாவட்ட காரைதீவு-01,06,07 மற்றும் 11 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் 19 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டிருந்தன.


இவ்வாறு பாதிக்கப்பட்டிருந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கான முற்பண தொகையாகப் 10 ஆயிரம் ரூபா வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சசிந்திரன் தலைமையில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் காரைதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.








EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# மாவடி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் கொடியேற்றம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடி வேல் விழா மகோற்சவத்தின் கொடி ஏற்றத்திரு விழா நேற்று (06) சனிக்கிழமை நடைபெற்றது.

முன்னதாக கொடியேற்ற உற்சவத்துக்கான கொடிச்சீலை கணேச லோகநாத குருக்கள் தலைமையில் பாரம்பரிய ரீதியாக பாலையடி வாலவிக்னேஸ்வர ஆலயத்தில் இருந்து எடுத்துவரப்பட்டது.









# அம்பாறையில் முதல் நிலை பெற்ற மாணவி பாராட்டிக் கௌரவிப்பு



**(மாளிகைக்காடு)**

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர்தர தொழில் நுட்ப பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் முதலாம் நிலையை கல்முனை வலய மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவி ஐ.எப். இஸ்ரா ஹஷ்பானி பெற்றிருந்தார். இந்த பாடசாலையை சேர்ந்த மாணவியான எம்.எம்.எப். பத்தூனா மூன்றாம் நிலையைப் பெற்றுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்ற கல்முனை கல்வி வலய பாடசாலை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம் தலைமையில் வியாழக்கிழமை (04) மஹ்மூத் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார் கலந்து கொண்டார்.

இதன்போது உயர்தர தொழில்நுட்ப பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் முதலாம் நிலையைப் பெற்ற இஸ்ரா ஹஷ்பானி பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இந்த மாணவிகளை சிறந்த முறையில் வழிநடத்தி நெறிப்படுத்திய பகுதித் தலைவர், சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவிகளுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதாக மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தெரிவித்துள்ளார்.





# தொடர் சம்பியன்களை வென்றுவந்த சாய்ந்தமருது வீரர்கள் கௌரவிப்பு!

(மாளிகைக்காடு)

கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட முன்னணி விளையாட்டுக்கழகங்களில் ஒன்றான சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக வீரர்கள் கிழக்கு மாகாண முன்னணி விளையாட்டுக் கழகங்களை வீழ்த்தி தொடர்ச்சியாக மூன்று சம்பியன் பட்டங்களை பெற்றமையை பாராட்டி வீரர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு கழக முகாமையாளர் எம்.எம். பஸ்மீரின் நெறிப்படுத்தலில் கழகத் தலைவரும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை உத்தியோகத்தருமான எம்.பி.எம். பாஜிலின் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (05) இரவு நடைபெற்றது.

கழக தவிசாளரும், ஓய்வுபெற்ற பிரதியதிபருமான ஏ.எம். நிஸாரின் ஆரம்ப உரையுடனும், கழக ஊடக செயலாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினருமான நூருல் ஹுதா உமரின் அறிமுக உரையுடனும் ஆரம்பமான இந்தப் பாராட்டு விழாவில் கல்முனை அபிவிருத்தி குழுத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீரர்களை பாராட்டிக் கௌரவித்தார்.

அத்துடன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்துக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், அம்பாறை மாவட்டக் கிரிக்கெட் வீரர்களைத் தேசிய அணியில் இடம்பிடிக்கச் செய்யத் தேவையான வேலைத் திட்டங்களை தான் இனிவரும் காலங்களில் முன்னெடுக்க தயாராக உள்ளார் என்றும் கடந்த காலங்களில் நாட்டின் நிலை மோசமானதாக இருந்ததாலும் கொரோனா தொற்று காரணமாகவும் இது தொடர்பில் சிந்திக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஸைபுதீன், பிரதியதிபர் ரீ.கே.எம். சிராஜ் உட்பட பிரதேச கல்விமான்கள், தொழிலதிபர்கள், பிராந்திய முக்கியஸ்தர்கள், கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.
















# 84 ஆவது அகவையில் கல்லூரி தினத்தை கொண்டாடும் மஸ்கெலியா சென். ஜோசப்!

**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா சென். ஜோசப் தேசிய கல்லூரியின் 84 ஆவது கல்லூரி தினம் நாளை (08) ஆகும்.

1940 ஜுலை மாதம் 08 ஆம் ஆண்டு சுமார் எண்பது மாண வர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது இந்தக் கல்லூரி. அந்த காலத் தில் இப்பாடசாலையின் ஆரம்ப பெயர் “அர் சூசையப்பர் ரோமன் கத்தோலிக்கப் பாடசாலை” ஆகும்.

இலங்கையின் பொருளா தாரத்தை வளர்த்தெடுப்பதற் காக தென்னிந்தியாவில் இருந்து பிரித்தானியரால் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்ட தமிழ் மக்கள், மத்திய மலை நாட்டில் குடியமர்த் தப்பட்டனர்.

அவர்கள் காடுகளை அழித்து கழனி நிலமாக்கினர். கல்வி அறிவற்ற, சரியான வழி நடத் தல் இன்றி, அறியாமையில் மூழ்கி, மேய்ப்போனற்ற ஆடுகளைப் போல விளங்கினர்.

இந்த மக்களைச் சரியான பாதை யில் வழி நடத்துவது அவசிய மென உணர்ந்த அன்றைய கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவ ரால் இந்த பாடசாலை ஆரம்ப காலகட்டத்தில் மஸ்கெலியா அர் சூசையப்பர் தேவாலயத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் முதலாவது தலைமை ஆசானாக அமர்ந்து , அதனது வளர்ச்சிக்கு உதவியவர் டி . எம். எட்வேர்ட்ஸ் ஆவார்.

அன்றைய அரசால் அறி முகப்படுத்தப்பட்ட இலவச மதிய உணவுத் திட்டமானது முதன் முதலாக இப்பாடசாலையில் பன்னி ரெண்டாம் திகதி ஏப்ரல் மாதம் 1944 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டது.

1960 ஆம் ஆண்டு அரசினர் வித்தியாசாலையைக் கையேற் கும் வரையும் தொடர்ந்து , பின்னர் முதலாம் திகதி ஓகஸ்ட் மாதம் 1963 ஆம் ஆண்டளவில் அரசினர் கலவன் பாடசாலையாக இப் பாட சாலை பெயர் மாற்றம் செய்யப் பட்டது.

காலவோட்டத்தில் பல்வேறுபட்ட அதிபர்களையும், ஆசிரியப் பெருமக்களையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்த இந்த பாடசாலை 1968 ஆம் ஆண்டு நாட்டின் அபிவிருத்தி, விவசாயம், மின்சார உற்பத்தியை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மவுசாக்கலை நீர்த் தேக்கத்தின் காரணமாக புதிய மஸ்கெலிய நகருக்கு மாற்றப் பட்டது.

பழைய பாடசாலையானது நீரில் மூழ்கிய நிகழ்வு இன்றும் எம் மனதினில் மாறா வடுவை ஏற்படுத்திவிட்ட ஒன்று.

பழைய பாடசாலை மவுசாக் கலை நீர்த்தேக்கத்தினுள் மூழ்கி யதால் எமக்கு புதியதொரு பாட சாலை இல்லாத நிலைமை.

அப்போதைய சமனெலிய சிங்கள மகா வித்தியாலயமானது காலை எட்டு மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை சிங்கள மொழி மூலமான மாணவர்களுக்கு நடை பெறும்.

அதன் பிறகு தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு பாடசாலை நடத் தப்பட்டது.

பிற்பட்ட காலப்பகுதியில் சம னெலிய சிங்கள மகா வித்தியா லயமானது வேறு ஒரு இடத்துக்கு மாற்றப்பட்டதன் காரணமாக தற் போது இருக்கும் சென் ஜோசப்ஸ் தேசிய கல்லூரிக்கு அப்போ தையக் கட்டடங்களும், அதனுடன் இணைந்த நிலப்பரப்பும் உரித் தானது.

தற்போதைய பாடசாலை அமைவிடம் சிறப்பானது. ஈழத் திருநாட்டின் மத்திய மலைநாட் டில் சர்வ மதத்தினராலும் போற் றப்பட்டு துதிக்கப்படும் மலை தான் சிவனொளி பாதமலை.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மலையின் கண்ணே அமைந் திருப்பதுவும், மவுசாக்கலை நீர்த் தேக்கத்தை அரணாகத் தன்ன கத்தேக் கொண்டிருப்பதுவும்தான் இந்த கல்லூரியின் பெருமை யாகும்.

1971 ஆம் ஆண்டு வரை அதிபர் எம்.நீக்கலாப்பிள்ளையின் தலை மைத்துவத்தில் இப் பாடசாலை தனக்கென தனியான பாதை யைப் பதிவு செய்து கொண்டு வந் துள்ளமை சிறப்பம்சமாகும்.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சியைக் குறிப்பிடும் வகை யில் 1973 ஆம் ஆண்டானது மாணவர்களது கல்வி வளர்ச்சியில், பாடசாலை அத்தியாயத்தில், ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்று கூறினால் அது மிகையா காது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தலை சிறந்த பாடசாலை ஒன்றிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த சி . கண பதிப்பிள்ளை என்ற அதிபரின்

தொடர்ச்சி▼

# 84 ஆவது அகவையில் கல்லூரி தினத்தை கொண்டாடும் மஸ்கெலியா சென். ஜோசப்!



**தொடர்ச்சி▲**

வருகையானது இப்பாடசாலை வரலாற்றில் ஒரு பொற்காலம் எனக் கூட வர்ணிக்கலாம்.

இன்று இப்பாடசாலையைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டவரே இவர் தான். தாய் கட்டடத்தைச் சுற்றி இருந்த காடுகளை, பற்றைகளை, பாரிய புல்டோசர் இயந்திரங்களைக் கொண்டும், சிரமதான அடிப்படையிலும், அழித்து தளம் வெட்ட உறுதுணையாக இருந்த கல்விப் பெருந்தகை இவராவார்.

லக்சபானை நீர் மின் திட்டம், கென்யன் திட்டம் போன்ற திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட கால கட்டமது. அத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட, பாரிய இயந்திரங்களை இலவசமாகப் பெற்று , தற்போது அமைந்துள்ள பாடசாலைக் கட்டடங்களுக்கான தளத்தை வெட்ட ஒழுங்கு செய்தமை இவரது தனித்துவமான முயற்சிகளுக்கான எடுத்துக் காட்டு.

எம்மவர்களுக்கு வாசிகசாலை மணம் கூடத் தெரியாத கால கட்டமது. முதன் முதலாக வாசிகசாலை அமைத்து , அதற்குரிய புத்தகங்களையும் பெற்று , சிறு அறையொன்றினுள் வாசிப்புப் பகுதி, இரவல் பகுதி ஆகிய இரண்டையும், கட்டடப் பற்றாக்குறை காலகட்டத்தின் போதும் திறம்பட நடாத்த வழி சமைத்தவர் .

வாசிக சாலையின் மகத்துவம் தெரிந்த அதிபர் என்ற காரணத்தினால் எங்கெல்லாம் நூல்களை திரட்ட முடியுமோ அங்கெல்லாம் தேடித் திரட்டி வாசிக சாலையை ஒரு கலைக்கூடமாக மாற்றியவர். அன்றைய வாசிப்புப் பயிற்சி தான் பிற்காலங்களில் எங்களைப் போன்றவர்களது வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

முதன் முதலாக பாடசாலைக்கு மின் இணைப்பு , தண்ணீர் குழாய் போன்றவற்றை அமைத்ததோடு, விளையாட்டையே கண்டிராத எம்மவருக்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதோடு, பெருமளவு உபகரணங்களையும் தனக்குத் தெரிந்தவர்கள் மூலம் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தவர்.

ஆங்கில வாசனையே கண்டிராத எம்மவருக்கு ஆங்கிலக் கழகத்தை அமைத்துக் கொடுத்தவர்.

பாடசாலைக்கென ஒரு சின்னம் தேவையென உணர்ந்து அதனை அறிமுகப்படுத்தியவர்.

"Tedice vincimus" என்ற லத்தீன் மொழி வாசகமே இச்சின்னத்தில் பதிவிடப்பட்டுள்ளது. "தைரியத்துடன் வெற்றி பெறுவோம்" என்பது இதனது அர்த்தம்.

நாடெங்கும் பஞ்சம் தலை விரித்தாடிய கால கட்டம். விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாடசாலை வளவெங்கும் கரும்பு, மரவள்ளிக் கிழங்கு, வற்றாளைக் கிழங்கு, கோவா, போன்ற பல் வேறுபட்ட பயிர்களை நட்டு, இத்துறையை ஊக்குவித்தவர்.

"என்றாவது ஒரு நாள் கொழும்பு சென்.ஜோசப்ஸ் கல்லூரிக்கு இணையான கல்லூரியாக இந்த கல்லூரியைக் கொண்டு வருவதே என் கனவாகும்." என அவர் அடிக்கடி மாணவர்களிடம் கூறுவதுண்டு. இவ்வாறான மகானுக்கு நம் சமூகம் இதனை விட எதனைத் தந்து விடமுடியும்?

இவரைக் கண்டாலே நடுநடுங்கிய காலம். கண்டிப்பும், கட்டுப்பாடும் மிக்க அதிபர். அவர் பெருமளவு ஆங்கிலத்திலேயே கதைப்பார் . எங்களுக்கு ஆங்கிலம் தெரியாத காலம். அதனால் அலுவலகப் பக்கம் செல்வதென்றாலே ஒரு தயக்கம் தான்.

பாடசாலைக்கு தேவையான வளங்களுக்கு அரசை மாத்திரம் நம்பியிராமல் , பெருமளவு வளங்களை தனக்கு தெரிந்தவர்கள் மூலம், நண்பர்கள் மூலம் பெற்றுக் கொண்டது இவரது ஆளுமைக்கான உதாரணங்கள்.

மிகக் குறுகிய காலம் (சுமார் ஒன்றரை வருடங்கள்), மாத்திரம் எமது பாடசாலையின் அதிபராக 1973- 1974 ஆம் ஆண்டுகளில் கடமையாற்றிய இவர் மீண்டும் வட மாகாணத்திலுள்ள வேறொரு பாடசாலைக்கு சடுதியாக இடமாற்றம் செய்யப்பட்டார்.

அவர் பதவி வகித்த அந்த குறுகிய காலத்தில் எண்ணிப் பார்க்க முடியாத பாரிய வளர்ச்சியினைக் கண்டிருந்தது எம் பாடசாலை.

எவ்வித இன, மத, பாகுபாடு இல்லாமல் சகோதரத்துவத்துடன் நம் தமிழினம் தலை நிமிர வழி- வகை செய்தவராக இருந்த இவரை இன்றும் இப் பகுதி வாழ் மூத்தக் குடியினர் நினைவில் வைத்திருப்பது பதிவிற்குரிய ஓர் அம்சமாகும்.

இவரைத் தொடர்ந்து வந்த அனைத்து அதிபர்களும் தங்களது பணிகளை மிகச் சிறப்புடனும், முழு முயற்சியுடனும் பாடசாலை வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணித்து சேவையாற்றினர்.

இப்பாடசாலை இன்று பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு துறைகளிலும், மாவட்ட, மாகாண, நாடளாவிய ரீதியில் முன்னேறி வருவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் இன்று கலை, வர்த்தக, விஞ்ஞானம் ஆகிய உயர்தரப் பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்படுவதானது இந்த பாடசாலையின் முன்னேற்றப் பாதையில் ஒரு மைல் கல்லாகும்.

கல்வித் துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று , முன்னோக்கிச் செல்வதுவும் பாராட்டப்படக் கூடிய ஓர் அம்சமாகும்.

என்னையும், என்னைப் போன்ற பலரையும் வளர்த்தெடுத்த இந்தப் பாடசாலையின் எண்பத்து நாலாவது கல்லூரி தினம் இன்றாகும்.

# பேசத் தயங்கும்... பேச வேண்டிய விடயம்! ‘மாதவிடாய் வறுமை’



நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொருவரதும் இயல்பு வாழ்க்கையில் பாரியளவிலான விகாரங்கள் ஏற்பட்டுள்ளன. பொருளாதாரம், சுகாதாரம் தொடர்பில் கடுமையான சவால்கள் நிலவுகின்ற இந்தத் தருணத்தில் பெண்களின் ஆரோக்கிய துவாய்களுக்கு புதிதாக பல வரிகள் அறிமுகம் செய்யப்பட்டு, விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் இலங்கையில் மாதவிடாய் வறுமையால் பெண்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மாதவிடாய் மற்றும் மாதவிடாய் வறுமை என்பன பெண்கள் எதிர்கொள்ளும் உடல் மற்றும் உடலியல் ரீதியான சிக்கல்களாகும். பெண்களின் உடல் மறு உற்பத்திக்குத் தயாராகும் போது மாதவிடாய் ஏற்பட ஆரம்பிக்கிறது. சராசரியாக ஒரு பெண் தனது 12 வயதுக்குப் பின் முதல் மாதவிடாய் சுழற்சியை எதிர்கொள்ள ஆரம்பிக்கிறாள். ஆனால் சில பெண்கள் 9 வயதிலேயே கூட முதல் மாதவிடாய் சுழற்சியை எதிர்கொள்கிறார்கள். மாதவிடாய் சுழற்சியானது பெண்களின் உடலில் சுரக்கும் ஓமோன்களின் செயற்பாட்டால் இடம்பெறுகின்றது.

பொதுவாக இந்த மாதவிடாய் சுழற்சி 28 நாள்களுக்கு ஒரு முறை இடம்பெறும் என்றாலும் சில பெண்களுக்கு மாதமொருமுறை, மூன்று மாதத்துக்கு ஒரு முறை



அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என்றவாறாக ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சி இடம்பெறுகிறது. இதற்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன. மாதவிடாய்க் காலங்களில் பெரும்பாலான பெண்கள் உடலியல் மற்றும் உளவியல் ரீதியான ஏராளமான பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கிறார்கள்.

மாதாந்தம் பெரும்பாலான பெண்கள் வயிற்று வலி, உடல் சோர்வு, தலை சுற்றல், வாந்தி, மனச்சோர்வு என்பவற்றுக்கு முகங்கொடுக்கின்றனர். பொதுவாக மாதவிடாய்க் காலங்களில் 50 மில்லி லீற்றர் வரை இரத்தப் போக்கு இருக்கும். சில வேளைகளில் அதிக இரத்தப் போக்குக் கடுமையான வயிற்று வலி என்பவற்றையும் பெண்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது.

மாதவிடாய் வறுமை (Period Poverty) என்பது மாதவிடாய் காலத்தில் பெண்களின் அடிப்படைச் சுகாதாரம் பேணலுக்கான அத்தியாவசியமான விடயங்களைப் பெறமுடியாமல் இருப்பதாகும். இது குறிப்பாக மாதவிடாய் துவாய்கள் அல்லது மாதவிடாயின் போது பயன்படுத்தும் தூய்மையான பொருள்கள் போதியளவில் பெற்றுக் கொள்ள இயலாமை, மலசலகூட வசதிகள், போதியளவான நீர் மற்றும் ஏனைய சுகாதாரம் பேணலுக்கான விடயங்களைக் குறிக்கின்றது.

உலக வங்கியின் கூற்றுப்படி, உலகெங்கிலும் உள்ள 500 மில்லியன் பெண்கள் அடிப்படை மாதவிடாய் பொருள்களை மற்றும் சுகாதாரமான வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் வசித்து வருவதாக கூறப்பட்டமை மிக அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தும் விடயமாக உள்ளது.

இலங்கையின் சனத்தொகையில் 52 வீதமானோர் பெண்கள். அவர்களில் 4.2 மில்லியன் பெண்கள் மாதவிடாயை எதிர்கொள்பவர்கள் ஆவர். 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாதவிடாய் பொருள்களின் மீதான வரிவிதிப்பு வீதம் 101.2 வீதமாகக் காணப்பட்டது. தற்போது அது 51.7 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை துப்புரவு பொருள்களுக்கான அணுகலை தொடர்ச்சியாக மட்டுப்படுத்தி வருகின்றது. மாதவிடாய்க்கான அடிப்படை சுகாதாரப் பொருள்களைப் பெறுவது குறிப்பிடத்தக்க ஓர் சவாலாகவே உள்ளது.

பல வரிகளால் சுமத்தப்பட்டு சனிட்டரி நப்கின்களின் அதிக விலையின் காரணமாக 25 வீதமாக மாதவிடாய் எதிர்கொள்ளும் பெண்கள் ‘மாதவிடாய் வறுமையை’ எதிர்கொள்கின்றனர். இது மாதவிடாய் சுகாதாரத்துக்கான உரிமைக்கு தடையை உருவாக்குகிறது.

மாதவிடாய் காலத்தில் சுத்தமாயிருப்பது மிக அவசியமானது. ஏனெனில் அது ஒரு பெண்ணின் உடல் நலத்துக்கு மட்டுமல்ல, உளநலத்துக்கும் தேவையானது.

மாதவிடாய் சுத்தம் என்பது தரமானதும் ஆரோக்கியமானதுமான துவாய்களை (சனிட்டரி நப்கின்களை) பாவிப்பதிலேயே தங்கியுள்ளது. பெண்களின் சுகாதாரத்திற்கு சவாலை ஏற்படுத்தும் வகையில் வரிகள் விதிப்புக்கள் அதிகரிக்கப்பட்டமையால் சுத்தமான துவாய்களுக்கு (சனிட்டரி நப்கின்களுக்கு) பதிலாக துணிகளைப் பாவிப்பதானது பல சுகாதார பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன.

அதாவது துணிகள் இரத்தத்தை உறிஞ்சி வைக்கும் தன்மை அற்றவை. எனவே இரத்தம் துணியில் தேங்கிக் கிருமிகள் உருவாகும். இது சிறுநீர் வழி மற்றும் யோனி வழியில் கிருமிகளை உட்செல்லச் செய்து சுகாதார சீர்கேடுகளை உருவாக்கும். அடுத்து, துணிகளினூடாக கசியும் இரத்தம், அவர்களின் உடைகளில் படுவதால் அது வெளித் தெரியும். இது அந்தப் பெண்ணை மனோரீதியாக தாக்கத்துக்கு உள்ளாக்கும். அத்தோடு அவர்களின் செயற்றினையும் குறைக்கும். அடுத்து சுத்தமான துவாய்கள் இலகுவாக மாற்றப்படக் கூடியன. எனினும் துணிகளை மாற்றுவது கடினமானது. இவ்வாறு துணிகளைப் பயன்படுத்துவதால் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பெண்கள் பல நெருக்கடிகளுக்கு ஆளாக நேரிடுகின்றது.

ஆகவே சுத்தமான துவாய்களைப் பாவிப்பது பெண்களின் மாதவிடாய் சுகாதாரத்துக்கு மிகவும் அவசியமானது என்று சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே துவாய்கள் (சனிட்டரி நப்கின்கள்) மீதான அனைத்து வரிகளையும் நீக்கி இவை ஓர் அத்தியாவசியப் பொருள்கள் என்பதை வலியுறுத்தி இந்த அத்தியாவசியப் பொருளை அனைத்துப் பெண்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளச் செய்தல், மாதவிடாய் சுகாதாரத்தை மனித உரிமையாக அங்கீகரித்து ஒவ்வொரு பெண்ணும் பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான மாதவிடாய்க்கான தயாரிப்புகளை நிதி ரீதியாக எவ்வித தடைகளும் சிரமமுமின்றி அணுகுவதை உறுதிசெய்தல், மாதவிடாய் வறுமையை இல்லாதொழிக்கும் நோக்குடன் மாதவிடாய் பொருள்கள், ஆடம்பரப் பொருள்கள் அல்ல அவை அத்தியாவசியமான பொருடள்கள் என்பதை ஆண், பெண் என அனைவரும் உணர்ந்து உயர்வான வரிவிதிப்பை இல்லாத ஒழிப்பதோடு மாதவிடாய் காலப்பகுதியின் போது அனைத்து பெண்களும் அவர்களுக்கான உரிமையையும் நல்வாழ்வையும் உறுதி செய்ய அனைவரும் ஒத்துழைக்க வேண்டியது ஒவ்வொருவரது பொறுப்பு என உணர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.

இதனால் எல்லா இடங்களிலும் பெண்கள் எதிர் கொள்ளும் இன்னல்களை குறைக்க முடியும் என்பது நிதர்சனமாகும்.

**யோ. ஜோவர்ணன்.**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**




# சூரத்தில் 6 மாடி கட்டடம் இடிந்து விழுந்து விபத்து

## 7 பேர் பலி; பலர் காயம்

குஜராத் மாநிலம் சூரத் நகரில் ஆறு தளங்கள் கொண்ட அடுக்குமாடி கட்டடம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 7 பலியாகினர். 10 இறகும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இடிந்து விழுந்து விபத்துக்குள்ளான கட்டடத்தில் அங்குள்ள ஜவுளித்துறையில் வேலை செய்யும் பல்வேறு புலம் பெயர் தொழிலாளர்கள் குடும்பத்துடன் வசித்து வந்திருக்கின்றனர். அந்தக் கட்டடம் தரம் குறைந்த நிலையில் இருந்ததாக கூறப்படுகிறது. கட்டடத்தில் இருந்து ஏழு பேர் மீட்கப்பட்டனர் என்று கூறப்படும் நிலையில் இடிபாடுகளில் இன்னும் எத்தனை பேர் சிக்கியிருக்கிறார்கள் என்பது தெரிவியவில்லை.

இதுகுறித்து சூரத் இணை ஆணையர் ராஜேஷ் பார்மர் கூறும்போது,

“இடிபாடுகளில் இருந்து ஏழு உடல்கள் மீட்கப்பட்டு உடற்கூராய்வுக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்” என்று தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட பெண் 23 வயதான காஷிஷ் சர்மா என்பது தெரியவந்திருக்கிறது. நியூ சிவில் மருத்துவனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் அவர் நிலைமை சீராக உள்ளது.

இந்த நிலையில், கட்டட இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. சிக்கியிருப்பவர்களின் எண்ணிக்கை சரியாக தெரியவில்லை.

இந்தக் கட்டிடம் கடந்த 2016 - 17 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது என்றும், அருகில் உள்ள தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள் கட்டடத்தின் 5 மாடிகளில் குடியிருந்தனர் என்றும் சூரத் பொலிஸ் கண்காணிப்பாளர் அனுபம் சிங் தெரிவித்துள்ளார்.

# ஆம்ஸ்ட்ராங் கொலையில் சி.பி.ஐ. விசாரணை தேவை

## தமிழகத்தில் சட்டம் ஒழுங்கே இல்லை என்கிறார் மாயாவதி

ஆம்ஸ்ட்ராங் கொலையில் உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. ஆகையால் சி.பி.ஐ. விசாரணை தேவை என சென்னையில் ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின் பகுஜன் சமாஜ் கட்சி தேசியத் தலைவர் மாயாவதி தெரிவித்தார்.

சென்னை பெரம்பூர் பகுதியில், பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங், கடந்த 5 ஆம் திகதி மாலை ஒரு கும்பலால் அரிவாளால் வெட்டி கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை தொடர்பாக முதல் கட்டமாக பிரபல ரவுடி ஆற்காடு சுரேஸ் தம்பி உட்பட 8 பேர் சிறையில் அடைக்கப்படுள்ளனர். மேலும் 3 பேரை கைது செய்து அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்

இந்த நிலையில் ஆம்ஸ்ட்ராங் இறுதி ஊர்வலம் இன்று நடைபெறுகின்றது. பெரம்பூர் பந்தர்கார்டன் பாடசாலையில் வைக்கப்பட்ட ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.




இந்த நிலையில் அக்கட்சியின் தேசிய தலைவர் மாயாவதி இன்று காலை 10.50 மணி அளவில் பெரம்பூர் பந்தர்கார்டன் பாடசாலையில் வைக்கப்பட்டுள்ள ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“புத்தர் காட்டிய மனிதாபிமானப் பாதையில் பயணித்தவர் ஆம்ஸ்ட்ராங். அவர் அவரது வீட்டுக்கு அருகேயே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தத் துயரச் செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனைடைந்தேன். இது தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டிருப்பதையே காட்டுகிறது. தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு இருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. இத்தருணத்தில், ஆம்ஸ்ட்ராங் குடும்பத்துக்கு தமிழக அரசு பாதுகாப்பு தர வேண்டும்.

இந்தக் கொலை தொடர்பாக கைதானவர்கள் உண்மைக் குற்றவாளிகள் அல்ல என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே, இந்தக் கொலை சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை தேவை. சட்டம் தன் கடமையை செய்யட்டும்.

கட்சியினர் யாரும் சட்டம், ஒழுங்கை கையில் எடுக்க வேண்டாம் என வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாட்டில் பட்டியலின மக்களின் நலன் காக்கப்பட வேண்டும். அவர்களுக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆம்ஸ்ட்ராங் குடும்பத்துக்கு பகுஜன் சமாஜ் கட்சி என்றும் உறுதுணையாக இருக்கும்.” – என்றார்.



# நுசிராத் அகதிகள் முகாம் மீது தாக்குதல்; 16 பேர் உயிரிழப்பு

மத்திய காசாவில் உள்ள நுசிராத் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த தாக்குதலில் ஏராளமானோர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, ஹமாஸின் படையெடுப்பிற்குப் பின்னர் காசா பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 100 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# "நான் மீண்டும் ஜனாதிபதியாகுவேன்" ஜோ பைடன் உறுதியான நம்பிக்கை



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை தனக்குள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ட்ரம்புடனான விவாதத்தின்போது உடல்நிலை சரியில்லாமல் இருந்ததனால் தான் சோர்ந் போயிருந்தேன் என தெரிவித்துள்ள ஜோ பைடன், நேரடி விவாதத்தில் சரியாக செயல்படாததற்கு தானே காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜனநாயக கட்சியில் தனக்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும், பெரும்பாலான தலைவர்கள் ஆதரவாகவே உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலிலிருந்து விலகு மாறு கடவுள் கூறினால் மட்டுமே தான் வெளியேறுவேன் என அவர் மேலும் குறிப்பிட்டள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பாக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார்.

இந்த தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள்? என்பது சர்வதேச அளவில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தேர்தலுக்கு முன்னரான நேரடி விவாத நிகழ்ச்சி கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி ஜோ பைடனும், முன்னாள் டொனால்டு ட்ரம்ப்பும் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் ஒருவருக்கொருவர் சரமாரியாக குற்றச்சாட்டுகளை எழுப்பிய நிலையில், ட்ரம்ப் கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாது, ஜோ பைடன் சற்று தடுமாறியிருந்தார். 81 வயதான அவரால் சரியான பதிவை வழங்க முடியாமற் போனது.

இந்த நிலையில், அவரின் தடுமாற்றம் பல சர்சைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், தற்போது தான் எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவது உறுதி என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# பங்களாதேஷில் கடும் மழை; 20 லட்சம் மக்கள் பாதிப்பு!

பங்களாதேஷில் பெய்து வரும் கனமழை காரணமாக 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், 8 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

பங்களாதேஷில் பருவநிலை மாற்றம் காரணமாக கடும் மழை பெய்து வருதுடன், இமயமலை மலைகளில் பனிப்பாறைகள் உருகி வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி, இவ்வாரம் பதிவான கனமழை காரணமாக முக்கிய ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. ஆற்றங்கரைகளில் வசிக்கும் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நாள்களில் வடக்கு பகுதியில் வெள்ளம் இன்னும் அதிகமாகும் என பேரிடர் மேலாண்மை அமைச்சக செயலாளர் கம்ருல் ஹசன் தெரிவித்துள்ளார்.








கனடா முரசு
பக்கங்கள் 06
சனிக்கிழமை 07/07/2024

## கியூபெக் விபத்தில் தீப்பற்றி எரிந்த கார்

**அதன் சாரதி உயிரிழப்பு**

கியூபெக், ஜூலை 7

கியூபெக்கின் மத்திய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 60 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். C2




# சூறையாடப்பட்ட 400 கிலோ தங்கக் கட்டிகள் வெளிநாடுகளுக்குக் கடத்தபட்டிருக்கலாம்!

**15 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் பொலிஸார் ஊகம்**

ஒன்ராறியோ, ஜூலை 7

கனடாவில் சூறையாடப்பட்ட 400 கிலோ தங்கம் மத்திய கிழக்கு நாடுகளுக்கோ அல்லது தெற்காசிய நாடுகளுக்கோ கடத்தப்பட்டிருக்கலாம் என கனேடிய பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

2023ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி, சுவிட்சர்லாந்தின் சூரிச்சிலுள்ள வங்கி ஒன்றிலிருந்து கனடாவின் ரொரன்றோவுக்கு இரண்டு பொதிகள் அனுப்பப்பட்டுள்ளன எனவும், கனடாவின் ரொரன்றோ விமான நிலையத்திலுள்ள சரக்குகள் சேமிப்பகத்தில் அந்த பொதிகள் வைக்கப்பட்டிருந்திருக்கின்றன எனவும் பொலிஸார் கூறுகின்றார்கள். C2

# கியூபெக்கில் பாதாளக் குழுத் தலைவரின் நெருங்கிய சகா பொலிஸாரினால் கைது!

கியூபெக், ஜூலை 7

கியூபெக்கில் பாதாளக் குழுத் தலைவருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என கியூபெக் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

28 வயதான பியர் ஒலிவியே லெவெஸ்க் எனப்படுபவர் ஜூன் 30 அன்று பொலிஸாரால், பிரிட்டிஷ் கொலம்பியாவின் கெலோவ்னா பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் திருடப்பட்ட சொத்துக்களை வைத்திருந்தமைக்கான குற்றச்சாட்டுகளின் பேரில் கனடா முழுவதும் மார்ச் மாதம் செயின்ட்-லூயிஸ் பெர்னியருக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது.

துப்பாக்கி வன்முறை மற்றும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளில் தேடப்படும் கும்பலின் தலைவர் டேவ் 'பிக்' டர்மெலின் 'நெருங்கிய கூட்டாளி'யாக செயின்ட் லூயிஸ் பெர்னியர் கருதப்படுகின்றார் என கியூபெக்




பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய வன்முறை அதிகரிப்பதைத் தடுக்க பெப்ரவரி 2019 இல் தொடங்கப்பட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஜூலை 2023 முதல் கியூபெக் நகர பொலிஸாரால் இவர் தேடப்பட்டு வந்தார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸில் சேர சிரியாவுக்குச் சென்ற பெண் மீது 2 பயங்கரவாதக் குற்றச்சாட்டுகள்

ஒன்ராரியோ, ஜூலை 7

2015ஆம் ஆண்டு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் சேர சிரியாவுக்குச் சென்றவர் எனக் கூறப்படும் 51 வயது பெண் மீது பயங்கரவாதம் தொடர்பான இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிம்பர்லி போல்மேன் ஒக்டோபர் 2022இல் கனடாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார் எனவும், குற்றச்சாட்டுகளை விசாரித்தபோது தொடர்ச்சியான பிணை நிபந்தனைகள் விதிக்கப்பட்டார் எனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

நவம்பர் 7, 2023 முதல், அவர் ஒரு பயங்கரவாத அமைதிப் பத்திரத்திற்கு உட்பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பசுபிக் பிராந்திய ஒருங்கிணைந்த தேசிய பாதுகாப்பு அமலாக்கக் குழு




வெள்ளிக்கிழமை ஸ்குவாமிஷ் பகுதியில் வசிக்கும் ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வான்கூவர் மாகாண நீதிமன்றத்தில் அவரது அடுத்த விசாரணை ஓகஸ்ட் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# விமர்சனங்களைக் கண்டு அஞ்சி லிபரல் தலைவர்கள் கல்கரி ஸ்டெம்பீட் நிகழ்வுகளைத் தவிர்க்கின்றனராம்

அல்பேர்ட்டா, ஜூலை 7

கல்கரி ஸ்டெம்பீட் (நெரிசல் ஒன்றுகூடல்) நிகழ்வில் இந்த வருடம் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் ஆகியோர் கலந்து கொள்ள மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான அரசியல் கட்சிகளில் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பியர் பொய்லியேவ் கலந்து கொள்வது மாத்திரமே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வார விடுமுறையில் நடைபெறும் வருடாந்த நிகழ்வில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிப்புற நிகழ்வில் எதிர்கொள்ளப்படும் விமர்சனங்களை தவிர்க்க லிபரல் மற்றும் புதிய ஜனநாயக்க கட்சியின் தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதை தவிர்ப்பதாக தெரியவருகிறது.

கொவிட் பெருந்தொற்று காலம் தவிர, 2013இல் லிபரல் கட்சியின் தலைவராக பொறுப்பேற்ற பின்னர், ஜஸ்டின் ட்ரூடோ ஒவ்வொரு ஆண்டும் கல்கரி ஸ்டெம்பீட் நிகழ்வில் கலந்து கொள்வது வழமையாகும்.

அண்மைய டொரன்டோ சென் போல்ஸ் தொகுதி இடைத்தேர்தல் தோல்வியை அடுத்து தொகுதி உறுப்பினர்கள், நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களைச் சந்திப்பதை பிரதமர் தவிர்க்கின்றார் என விமர்சிக் கப்படுகிறது.

கல்கரி ஸ்டெம்பீட் நிகழ்வில் கலந்து கொள்வதை தவிர்த்து டொரன்டோ பெரும்பாகத்தில் நடைபெறும் இஸ்லாமிய கலாசார நிகழ்வில் பிரதமர் கலந்து கொள்ளவுள்ளார்.

## சூறையாடப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது நேரத்தில், தக்க ஆவணங்களுடன் வந்த ஒருவர் அந்த பொதிகளை தனது ட்ரக்கில் ஏற்றிக்கொண்டு சென்றுள்ளனர்.

அந்த பொதிகளில், 6,600 தங்கக் கட்டிகள் இருந்துள்ளன. 400 கிலோ எடையுள்ள அவற்றின் மதிப்பு சுமார் 20 மில்லியன் டொலர்கள். அத்துடன், மற்றொரு பொதியில் 2 மில்லியன் டொலர்கள் பணமும் இருந்துள்ளது.

அன்று இரவு 9.30 மணியளவில், அந்த பொதிகளைப் பெற்றுக்கொள்ள வேறு சிலர் வந்துள்ளார்கள்.

அவர்கள் அந்த பொதிகளுக்கான ஆவணங்களைக் கொடுத்ததன் பின்னரே ஏற்கனவே வந்த நபர்கள் மோசடியாளர்கள் என்பதும் அவர்கள் அந்த தங்கக்கட்டிகளையும் பணத்தையும் அபகரித்துச் சென்றுவிட்டார்கள் என்பதும் தெரிய வந்துள்ளது.

திரைப்படக் காட்சிகள் போல் நடந்த இந்த சம்பவம் நடந்து சுமார் 15 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், இதுவரை அந்தத் தங்கம் என்னவானது என யாருக்கும் தெரியவில்லை.

இந்நிலையில், கனடாவில் அபகரிக்கப்பட்ட அந்த தங்கம், உடனடியாக, மத்திய கிழக்கு நாடுகளுக்கோ அல்லது தெற்காசிய நாடுகளுக்கோ கடத்தப்பட்டிருக்கலாம் எனக் கனேடிய பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

விடயம் என்னவென்றால், அபகரிக்கப்பட்ட அந்த 6,600 தங்கக் கட்டிகளின் மதிப்பு சுமார் 20 மில்லியன் டொலர்கள். ஆனால், அந்த வழக்கு விசாரணைக்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை மட்டுமே 5.3 மில்லியன் டொலர்கள்!

என்றாலும், இதுவரை சூறையாடப்பட்ட தங்கம் என்ன ஆனது என்பது குறித்த சரியான தகவல் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கியூபெக்...

கியூபெக்கின் செய்ன்-ஈயுலாலியில் நெடுஞ்சாலை 55இல் இரண்டு வாகனங்கள் மோதியத்தில் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீதியை விட்டு விலகி எதிர் வீதியில் நுழைந்த கார் மற்றொரு காரில் மோதி விபத்துக்குள்ளாகித் தீப் பிடித்துள்ளது.

தீப்பிடித்த வாகனத்தை செலுத்தி வந்த 60 வயதான வரே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.






# மெக்ஹில் பல்கலையில் போராட்டக்காரர்களை கலைக்கக் கண்ணீர்ப் புகைக் குண்டுப் பிரயோகம்

## எல்லை மீறிச் செயற்பட்ட ஒருவர் பொலிஸாரால் கைது

கியூபெக், ஜூலை 7

வெள்ளியன்று இரவு மெக்ஹில் பல்கலைக்கழகத்தில் பலஸ்தீனியர்களுக்கு ஆதரவான போராட்டத்தின் போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொன்ரியல் பொலிஸும் நகர ஊழியர்களும் நேற்று முன்தினம் விக்டோரியா சதுக்கத்தில் பலஸ்தீன ஆதரவு முகாமை அகற்றினர்.

வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் போராட்டக்காரர்கள் திரண்டனர் என நகரப் பொலிஸார் கூறுகின்றனர்.

ப்ளேஸ் ஜீன்-ரியோபெல்லில் மற்றும் ஒரு கிலோமீட்டர் வடக்கே மெக்கில் பல்கலைக்கழகத்தின் டவுன்டவுன் வளாகத்தை நோக்கி அவர்கள் அணிவகுத்துச் சென்றுள்ளனர்.

அங்கு ஏப்ரல் பிற்பகுதியில் இருந்து ஒரு தனி முகாம் உள்ளது.

ஹமாஸுடனான இஸ்ரேலின் போர் தொடர்ந்து அதிகரித்து வருவ தால், இஸ்ரேலுடனான உறவை பல்கலைக்கழகம் துண்டிக்கக் கோரி போராட்டக்காரர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

மெக்கில் நிர்வாகக் கட்டடத்தில் ஜன்னல்களை உடைத்து, வளாகப் பாதுகாவலரைத் தாக்கியதற்காக 66 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை பயன்படுத்தினர் எனவும், இரவு 11 மணியளவில் முடிவடைந்த பொலிஸ் நடவடிக்கையின் போது இரண்டு அதிகாரிகளுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# பிரிட்டிஷ் கொலம்பியா பிரதேசத்தில் பல இடங்களில் வெப்ப எச்சரிக்கை!

## 40 பாகை செல்சியஸைத் தாண்டுமாம்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 7

பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள இரண்டு டசினுக்கும் அதிகமான பகுதிகள் இன்று காலை வெப்ப எச்சரிக்கைக்கு உட்பட்டுள்ளன.

ஏனெனில், வரவிருக்கும் நாள்களில் வெப்பநிலை குறைந்தது 40 பாகை செல்சியஸ் வரைக்கும் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருபதுக்கும் மேற்பட்ட பிராந்தியங்களுக்கு சுற்றுச்சூழல் கனடா வெப்ப எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளது.

வெப்ப அலையின் மோசமான நிலை இன்று ஞாயிற்றுக்கிழமை தொடங்கி அடுத்த வாரம் வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.






# மிசிசாகாவில் கத்திக் குத்தில் பெண் பலி; ஆண் ஒருவர் கைது

ஒன்ராரியோ, ஜூலை 7

நேற்று (ஜூலை 6) பிற்பகல் மிசிசாகாவில் ஒரு பாடசாலைக்கு வெளியே இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனொ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வின்ட்வுட் டிரைவ் மற்றும் க்ளென் எரின் டிரைவிற்கு அருகிலுள்ள செயின்ட் எலிசபெத் செட்டன் பாடசாலையின் வாகன நிறுத்துமிடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த பெண்ணை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்தார் எனொ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்தில் சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்த ஆணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# கனடாவில் லொத்தர் சீட்டிழுப்பில் 70 மில்லியன் டொலர் வென்ற பெண்




கனடாவில் பெண் ஒருவர் லொத்தர் சீட்டிழுப்பில் 70 மில்லியன் டொலர் பணப்பரிசில் வென்றுள்ளார்.

லொட்டோ மெக்ஸ் லொத்தர் சீட்டிழுப்பில் 49 வயதான பெட்ரிசியா வோர்டன் என்ற பெண்ணே இவ்வாறு பரிசு வென்றுள்ளார்.

கடந்த மே மாதம் 31 ஆம் திகதி நடைபெற்ற லொத்தர் சீட்டிழுப்பில் இந்தப் பெண் இவ்வாறு பணப்பரிசு வென்றுள்ளார்.

வோர்டன் கடந்த பல ஆண்டுகளாகவே லொத்தர் சீட்டிழுப்புக்களில் பங்கேற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இடது உள்ளங்கை அரிப்பு எடுத்ததாகவும் அதனால் லொத்தர் சீட்டிழுப்பில் பரிசு கிட்டும் என நினைத்தார் எனவும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

லொத்தர் சீட்டிழுப்பில் பரிசு வென்றமை மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியதாகவும், உணர்வுகள் பொங்கின எனவும் வோர்டன் தெரிவிக்கின்றார்.





# இரு யுவதிகள் படுகொலை தொடர்பிலான தகவலுக்கு ஒரு லட்சம் டொலர் சன்மானம்

## பீல் பிராந்திய பொலிஸார் அறிவிப்பு

கனடாவில் இரண்டு யுவதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்துத் தகவல் வழங்குவோருக்கு சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் பீல் பிராந்திய பொலிஸார் இவ்வாறு சன்மானம் வழங்குவார்கள் என அறிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு ஒரு லட்சம் டொலர் சன்மானம் வழங்கப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

24 வயதான ஜெக்லின் கோர் மற்றும் 19 ரெனிலியா ரிச்சர்ட்ஸ் ஆகிய இரண்டு யுவதிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மோதல்களின்போது தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இவ்வாறு இரண்டு யுவதிகளும் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தக் கொலைகளுடன் தொடர்புடைய விசாரணைகளில் ஒத்துழைப்பு வழங்குவோருக்கு சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.





# 20 வயது இளைஞரைச் சுட்டுக் கொன்ற சம்பவத்தில்14 வயதுச் சிறுவன் கைது!

கனடாவின் டொரண்டோவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 14 வயதுச் சிறுவன் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

டொரண்டோவில் கடந்த மாதம் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 20 வயதான அஜய் சிம்ப்சன் என்ற இளைஞர் உயிரிழந்தார்.

ஜூன் 24 ஆம் திகதி ஜேன் ஸ்ட்ரீட் மற்றும் ஃபால்ஸ்டஃப் அவென்யூ பகுதியில் துப்பாக்கிச் சத்தம் கேட்டு பொலிஸ் விரைந்தது.

நான்கு நபர்கள் துப்பாக்கிகளுடன் லைட் நிற SUV காரிலிருந்து இறங்கித் துப்பாக்கி சூடு நடத்தினர் என பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.

துப்பாக்கி சூடு நடத்திய பின்னர், சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர் எனவும் கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டறியப்பட்ட சிம்ப்சன் மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார்.

இந்த வழக்கில், கடந்த வியாழக்கிழமையன்று பொலிஸ் அதிகாரிகள் 14 வயதான ஒரு சிறுவனைக்





கைது செய்து, முதல் தரக் கொலைக் குற்றச்சாட்டைச் சுமத்தினர்.

குற்றவியல் நீதிச் சட்டத்தின் காரணமாக, அவரது அடையாளத்தை வெளிப்படுத்த முடியாது. மீதமுள்ள மூன்று சந்தேக நபர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று கூறப்பட்டது.




# குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்துக்காக 104 மில்லியன் கனேடிய டொலர் இழப்பீடு அறிவிப்பு!

## கனடாவில் கத்தோலிக்க திருச்சபை வெளியிட்டது

கனடாவில் குழந்தைகள் மீதான துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் சுரண்டலில் மிகப்பாரிய தொடர் குற்றச் சம்பவம் என்று கூறப்படும் விடயத்தில் பாதிக்கப்பட்ட நூற்றுக் கணக்கானவர்களுக்கு கத்தோலிக்க திருச்சபை இழப்பீடு அறிவித்துள்ளது.

கிழக்கு கனடாவில் துஷ்பிரயோகத்திற்கு ஆளான நூற்றுக்கணக்கானவர்களுக்கு கத்தோலிக்க திருச்சபை 104 மில்லியன் கனேடிய டொலர்களை (இலங்கை பணமதிப்பில் சுமார் ரூ.2,314 கோடி) வழங்கும் என்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை அமெரிக்க டொலர்களில் 76 மில்லியன் இருக்கும்.

செயின்ட் ஜான் பேராயர் குழந்தைகளை துஷ்பிரயோகத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என 2020-ஆம் ஆண்டில், நீதிமன்றத்தினால் கண்டறியப்பட்டது.

கனடாவின் நியூஃபவுண்ட்லேண்ட் மற்றும் லாப்ரடோர் மாகாணத்தில் அமைந்துள்ள மவுண்ட் கேஷல் அனாதை இல்லத்தில் நடந்த இந்த அத்துமீறல் கனடாவின் மிகப்பாரிய சிறார் துஷ்பிரயோக சுரண்டலாகக் கூறப்படுகிறது.

இந்தக் குழந்தைகள் காப்பகம் தற்போது மூடப்பட்டுள்ளது.

1940 களில் தொடங்கி பல தசாப்தங்களாக, அனாதை இல்லத்தின் சிறார்கள் பாதிரியார்கள் மற்றும் பிற தேவாலய அதிகாரிகளால் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர் என நீதிமன்றம் கண்டறிந்தது.

மொத்தம் 291 பாதிக்கப்பட்டவர்களுக்கு 55,000 முதல் 850,000 கனேடிய டொலர்கள் வழங்கப்படும் என்று ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எர்ன்ஸ்ட் அண்ட் யங் என்ற கணக்கியல் நிறுவனம் பாதிக்கப்பட்டவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை தீர்மானிக்க மூன்றாம் தரப்பு நடுவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

